உ

சிவமயம்



அமரர்

# செல்லையா செல்லகாந்தன்

அவர்களின்

# நினைவு மலர்

In Loving Memory of

# Mr. Selliah Sellakanthan

17 - 09 - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# செல்லையா செல்லகாந்தன்

அவர்கள்

பிறப்பு 04.11.1928

இறப்பு 13.08.2022

## திதிவெண்பா

சுபகிருது வருட ஆடிசேர் சனிவாரமதில்
தவமான மதிமங்கு துதியை திதி நாளில்
செல்ல காந்தன் புவிவாழ்வை துறந்தேகி
மெல்ல கைலை சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தங் கை!

## தேவாரம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந் தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வத்துக் கூத்துகந் தானை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலுகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளி எழுச்சி

போற்றி! என்வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுவோம்!
சேற்றிதழ்க் கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எனை உடையாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

அருணன் இந்திரன் திசை அணுகினன்! இருள்போய்
அகன்றது; உதயம் நின் மலர்த் திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ, நயனக்
கடிமலர் மலர மற்றண்ணல் அங்கண்ணாம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே!

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்;
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய்; எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்!
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே !

'பூதங்கள் தோறும் நின்றாய்! 'எனின் அல்லால்
'போக்கிலன் வரவிலன்' என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்!எங்கண் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!
செப்புறு கமலங்கள் கண் மலருந்தண்வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார் ;
இதுஅவன் திருவுரு, இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கையுள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணிகொள்ளும் ஆறு?அது கேட்போம்;
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்!
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந்துறை யுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளே! உனதொழுப் படியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறையாய் வழி அடியோம்
கண்ணகதே நின்று களிதரு தேனே!
கடலமுதே!கரும்பே!விரும்படியார்
எண்ணகத்தாய்! உலகுக்கு உயிரானாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

'புவனியிற் போய் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று' நோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய்!திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என் னேஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளி கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னோங்கேல் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற் றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற் றில்லை சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தார் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையர்க் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப்பூம் புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றார்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

போற் றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற் றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற் றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற் றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற் றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற் றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற் றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற் றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



குமரகுருபரர் அருளிய

# நவராத்திரி பாமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடி யுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கஎன் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரரரரர
ரிஹண பவச ரிரிரிரிரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்

கிலியுங் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக

ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்

இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுடிகு டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை ஆளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினைஅருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க

அடியேன் வதனம் அசைவுளநேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்கநோக்கநொடியில் நோக்கத்

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகைஅகல
வல்லபூதம் வலாட்டிகப் பேய்கள்

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்தவஞ்சனைதனையும்

ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலைவெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் புரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க

ஒளிப்புஞ் சுளுக்கு மொருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணைபருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவணபவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திரழ் ஒழிபவனே
பரிபுரபவனே பவமொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்

மெத்தமெத் தாகவேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்

எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவன் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து

மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்

எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்

வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி

குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி

வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு செல்லையா செல்லகாந்தன் அவர்களின் உலக வாழ்வின் நினைவுகள்

ஈழவளத் திருநாட்டின் வடபுலமான யாழ்ப்பாண மாவட்டத்தில் பக்தி கமழும் கோவில்கள் சூழ்ந்த வண்ணை மேற்கில் அமரர்களான செல்லையா - திரவியமணி அவர்களின் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தார். செல்வச்சந்நிதி முருகனின் அருளால் பிறந்ததனால் செல்லக்காந்தன் எனும் பெயரினைப் பெற்றார்.

மூத்த பேரனாக உற்றார் பெற்றார் அன்பில் வளர்ந்தார். ஆரம்பக்கல்வியை தனது அருமைப் பேரன் பேத்தியின் அரவணைப்பில் யாழ் இந்துக்கல்லூரியிலும் உயர் நிலைக்கல்வியை பெற்றோரின் ஆதரவில் கொழும்பு St.Peters கல்லூரியிலும் பயின்றார். பக்திமிகுந்த பெற்றோரின் வழிநடத்தலால் சிறுவயதிலிருந்தே இறைவழிபாடு, பொதுநல சேவை எனப் பல நற்பண்புகள் அவரில் நிறைந்திருந்தது.

தனது 21ஆவது வயதிலேயே கொழும்பு Katchari இல் பணியாற்றத் தொடங்கி, படிப்படியாகப் பல பதவிகளைப் பெற்றார்.

1955ஆம் ஆண்டு கொக்குவிலைச் சேர்ந்த அமரர்கள் திரு. முதலியார் குமாரசுவாமி-கனகசவுந்தரம் ஆகியோரின் மகளான அமரர் பரமேஸ்வரியை பெற்றோர் ஆசியுடன் மணந்தார். அன்பும், அறமும் நிறைந்த அவர்கள் மணவாழ்வின் நிறைவாக சக்தியசீலன், சக்தியகுமாரன், சுமதி, சக்தியேந்திரா எனும் நான்கு நன் மக்களைப் பெற்றனர்.

1960ஆம் ஆண்டு தன்னலத்தை ஒதுக்கி, அரசுப்பதவியைத் துறந்த அன்னார் தன் சுயமுயற்சியால் Satchithanantham & co, Morowakka & co, Abdulrahim & co, Pearl Tea, Cans Secretarial போன்ற தனியார் நிறுவனங்களில் கணக்காளராகவும், Director ஆகவும் பணியாற்றினார். இக்கால கட்டத்தில் தன்னம்பிக்கை, சுயமுயற்சி, இறையருள் துணையுடன் அல்லும்பகலும் அயராது உழைத்து தன்மக்களின் கல்வி, திருமணம் ஆகிய சுய கடைமைகளை மனைவியின் அன்பான ஆதரவுடன் சிறப்பாக நிறைவேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த இறைபக்தி நிறைந்த இவர், தெகிவளை விஷ்ணு கோயிலிலும், களுபோவில ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலிலும் இடையறாது இறை தொண்டு செய்துவந்தார். இதன் பயனாக நான்கு பிள்ளைகளும் நன்னெறிவாய்ந்த வாழ்க்கைத் துணைவர், துணைவியருடன் அன்பும் அறமும் நிறைந்த இல்லறத்தை நடத்துவதையும், பேரன் - பேத்தி - பூட்டன்- பூட்டிகள் என தனது அடுத்த தலைமுறைகள் தளிர்த்து வருவதையும் பார்த்து மகிழ முடிந்தது.

இவர் தனது ஓய்வுநேரங்களில் ஜோதிட சாஸ்திரங்களிலும் வல்லமை பெற்று, பலருக்கும் ஆலோசனைகள் பகிர்ந்தமை கண்கூடு.

2002ஆம் ஆண்டு ஆருயிர் மனைவி இயற்கை எய்தியது தாங்கொணாத் துயரத்தையும் வெற்றிடத்தையும் அவர் மனதில் உருவாக்கியது. எனினும் அவரது தொடர்ச்சியான இறைதொண்டும், பக்தியும் அவரை அத்துயரிலிருந்து மீள்வித்தது.

இறுதிவரை நாராயணா! ஆஞ்சநேயா! என்ற தொடர்ச்சியான நாமங்களே அவர் உடல் ஆரோக்கியத்துடனும் திடமான நினைவுடனும் வாழ்ந்து, நல்லை முருகனின் திருவிழாக் கோலாகல நாளொன்றில் அமைதியாக இறைபதம் அடைய உதவியுள்ளது.

நீண்ட நிறைவான இல்லற வாழ்வினை அனுபவித்து நிறைவுசெய்து இறையடி சேர்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆஞ்சநேயரை பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியை

## அபரக்கிரியையின் நோக்கம்

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகின்றது. அபரக்கிரியை உத்கிராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறைப்படும் கிரியைகள் யாவும் சமயதீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யபடுவதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது, திருமறையுடன் கிரியை செய்ய வேண்டும். ஆதலால் எல்லோரும் சமயதீட்சை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## உத்திராந்தக் கிரியை

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது சுற்றத்தாரிடத்தும், பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசி, சிவபெருமானைதத் தியானித்து தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியவரைக் கொண்டு பாடக்கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமயதீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண் பூசி, அவர் வாயில் கங்காதீர்த்தம் விட்டு அவர் தலையைத் தம் மடி மீது வைத்து அவர் செவியில் ஸ்ரீபஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின் உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு கிடத்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியால் சேர்த்து கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்து கட்டிவிடவும். உப்பைப்பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் பிரேதத்திற்குக் கீழே நீர் நிரப்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத் துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப்பாகத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றத்தவர் அருகில் இருந்து, தேவார திருவாசகங்களை பக்தியுடன் ஓதவேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் அவிட்ட பஞ்சமி எனப்படும். இப் பஞ்சமியில் ஒருவர் இறந்தால் இதற்கு தானம் சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும்.

## சூர்ணோற்சவம் (வீட்டில் நடைபெறும் கிரியை)

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும் மேலே வேயப்படும் ஓலை பச்சை ஓலையாயும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன் வாழை குலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தில் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீக்ஷிதராயின் ஈசுவர மூர்த்தியையும், நிர்வாண தீஷிதர் ஆசாரி அபிடேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியையும், நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை சானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கின், இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேணடும். நடுவே அக்கினி காரியத்திற்கெனக் குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையையும் அதற்குக் கிழக்கில் பேரிதானத்திற்காக அரிசி யையும் வைக்கவும். உரல், உலக்கைக்கு மாவிலை, கூர்ச்சம், சோடிவஸ்திரம் கட்டி மலர் மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும் மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அப்டேகப் பொருட்கள் இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து அதில் பாசுபதாஸ்தரி தேவரைப் பூஜிக்கும்படி காரணாகமத்தில் உள்ளது. இக் கும்ப சலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண்குடத்தில் சுடலைக்குக் கொண்டு செல்லும் உத்திரகும்பம் அமைத்தல் வேண்டும். ஸநபன கும்பத்திற்கு தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்சகௌவியத்தையும் அமைக்கவும்.

கிரியை செய்வோன் தந்தைக்கு மூத்தமகன், தாய்க்கு இளையமகன் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாத போது மனைவி, கணவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், மருமகள், சகோதரி, சபிண்டன், சமானோதன், சீடன், குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுக்குள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர்கள் தந்தை அல்லது தாய்க்கு கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து நீராடி கோடி வஸ்திரம் இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்தல் வேண்டும். குரு கர்த்தாவிற்கு விபூதி கொடுத்து பவித்திரம் அணியச் செய்து உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்து கொள்ளுவார். விநாயக பூஜை புண்ணியாகவாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்ச கௌவியத்தை மண்டபத்தில் தெளித்து இடத்தைச் சுத்தி செய்து நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்வர். இங்கு கர்த்தாவிற்கு பஞ்சகௌவியம பருகக் கொடுக்கக் கூடாது. கிரியை நடைபெறும் போது, திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு அங்கநியாசம், கரநியாசம், சவயோகம் பாவனை செய்து ஸ்நபன கும்பப்பூசை முடித்து, அக்கினி கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூர தீபங் காட்டிய பின் பிரேதத்தை குளிப்பாட்டுதற்காக வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று தலை தெற்காகக் கிடத்தி ஆசௌ சிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய் அரப்பு என்பனவற்றை பிரேதத்தின் சிரசில் வைப்பர். பின்பு அரிசிமா, மஞ்சள்மா, பால் தயிர், இளநீர், அபிஷேகம் செய்து பின் பஞ்சகௌவியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கை மேல் வலது கையை வைத்துப் பிடிக்க வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங்கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டுவர வேண்டும். தலை தெற்கில் இருக்கக் கூடியதாகக் குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திரு நீற்றை நீரில் குழைத்து சத்தியோசாதனம், முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி பன்னீரால் கை கழுவி நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் திருநீற்றுப் பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம், குங்குமத் திலகம் இட்டு பூ மாலை சாத்தவும்.

**சுண்ணம் இடித்தல்**

பேரிதானம் செய்து அதன்பின் உரலில் பூமாதேவியையும் உலக்கையில் மேருமலையும் பூசித்து ("வையகமெல்லாம் உரலாக மாமேரு வென்னும் உலக்கை நாட்டி" - திருவாசகம்) அறுகு, மஞ்சள்மா உரலில் இட்டு எண்பத்தொரு பதமந்திரம் சொல்லிமூன்று தரம் இடித்துப் பின் திருவாச கத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்சபுராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப் பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து கண்களிலும் சார்த்தி மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது பேரப்பிள்ளைகள் பிரேதத்தைச் சூழ நின்று பந்தம் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வதுதான் முறையானது. நம்மவர்களின் ஆசாரக்குறைவு கருதி பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸ்நானம் நீராட்டல் முடித்து அதன் மேல் சுண்ணப் பொடி தெளிக்கப்படுகின்றது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம்கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு யாத்திரா தானமும் நிறைவு செய்து குருக்களுக்குத் தட்சணை கொடுக்ப்படும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப் புறமாக சுற்றிவந்து வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி பச்சை அரிசியும்தேங்காய்த் துருவலும் சேர்த்தது) மனைவி, மக்கள் பிரேதத்தின் காலில் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறைநாழி (தீபம், நெல் நிறைந்த சேர்)யைப் பிரேதத்தின் கையில் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றைச் சேலை முந்தானையில் முடிந்துவிடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி தலைப்பகுதியில் ஒரு முடிச் சிடவும். கீழே உள்ள ஆர்க்கை துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத்திற்குரிய மரங்களில் பச்சை மரத்தில் கட்டப்பட்ட பாடையில் பச்சைத் தென்னை ஓலை பன்னாங்கில் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக மரத்தால் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்த பின் பிரேதம் மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும். காற்பக்கம் முன்பாக பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்பை மூன்று காலுடைய உறியில் வைத்து குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னே வர வாத்தியம் சங்கு ஒலிக்கத் திருமுறை பாடல் பாடியவாறு சுடலையை அடைந்து தலை தெற்கே இருக்குமாறு இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அந்த சிதா ஸ்தானத்தில் தலை தெற்கே இருக்க பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும், சுமங்கலி இறந்தால் கணவர் முந்தானையில் முடிந்த வெற்றிலை பாக்கு பழம் என்பற்றை எடுத்து வைத்து தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவ கும்பத்தை இடது தோலில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து தலைப்பாகத்தில் வைத்த அதன் கழுத்து வரை டைத்தெடுத்து கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும் ஒவ்வொரு முறையும் குடத்திற்கு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டின் தெற்கு நோக்கி நின்று கொள்ளியைவைத்து குடத்தை முன்பக்கத்திற்கு போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டிற்குச் சென்று பவித்திரம் உபவீதம் என்பவற்றை கழற்றி சிதையில் போட்டு நமஸ்காரம் செய்து திரும்பி பார்க்காமல் நீர்க்கரையை அடைந்து நீராடி நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம் பிதிரர் பொருட்டு இரு கைகளாளும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியாபனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும் போது ஒரு சிறிய இரும்புச் சாமான் கொண்டு வர வேண்டும். ஏனெனில் பேய் பிசாசுகள் தொடராமல் இருக்க இரும்புக்கத்தியைக்கொண்டு வருவர். சுற்றத்தவரோடும் வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலையை உமிழ்ந்தபின் ஒரு கல்லில் ஏறி உலக்கையை கடந்து கைகால் கழுவி பின் நீராட வேண்டும். வீட்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தப்படுத்தி தூய்மையாய் தயாரித்த சோறு கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து தீபமேற்றி திருமறையைப் பாடிய பின்னர் உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால் அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியெட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றை வைத்து திருமுறை பாராயணம் செய்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறுபங்கைப் படைத்து உண்பது சில இடங்களில் வழமையிலுள்ளது.

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்னி தணிந்திருந்தால் சிவாக்னி மூட்டிபிராயச்சித்தம் ஓமம் தத்துவ ஓமம் செய்யவும். அக்னி தணியும் வரை நீரை ஊற்றவும் அபிஷேகப் பொருட்களால் காலிலிருந்து தலை வரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி முழந்தாள் தொப்புள் மார்பு நெற்றி தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி சந்தனம் பூ முதலியவற்றைச் சாத்தி தூப தீபம் காட்டியபின் முளந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோ சாதம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை எடுத்து முக்காலிலுள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாத்திரத்தின் வாயை கோடித் துணியால் மூடிக்கட்டவும். மிகுதியுள்ள எலும்பு சாம்பலை அள்ளி அவ்விடத்தைச் சுத்தி செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து பால் தெளித்து நிலத்தை குளிர பண்ணி வெற்றிலை பாக்கு பழம் நெற்பொரி ரொட்டி வடை (கோது நீக்காத உழுந்தில் செய்தது) முதலியவற்றை பூத பிரேத பைசாசனங்களின் பொருட்டு நிவேதித்து திருமுறை ஓரி வழிபாடு செய்த பின்னர் எலும்பையும் சாம்பலையும் சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ அல்லது காசிக்கோ கொண்டு செல்லவென்று எடுத்து வைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை கடித்து உலக்கையை கடந்து வருதல் வேண்டும்.

### அஸ்தி சஞ்சயன் போது கொண்டு செல்பவை

அரிசி மாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும். அதோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவத்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை பூஜைக்குரிய பொருட்கள் முதலியன.

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் இறந்தால் தோசமுண்டு. இதற்கு சாந்தி செய்ய வேண்டும். வீட்டில் பூர்ண கும்பம் தண்ணீர் பசு தீபம் இவற்றை மூன்று நாள் இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது வைக்க வேண்டும். நீற்றுப் பூசனிக்காய் கட்டுதல் வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம்.

பிரேதத்தை சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம் பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக் கிழமை பிரேததகனம் செய்ய நேரிட்டால் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுபநட்சத்திர சுபாவாரத்தில் பஞ்சமி சாந்தி செய்யப்படும் அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம். ஆசாரியார் நித்திய கருமம் முடிந்த பின்னர் புண்ணியாகவாசனம் பஞ்சகௌவியம் ஸ்தான சுத்தி செய்வார். பின் விக்னேஸ்வரனை பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன யமனை வெள்ளி அல்லது செப்பு தகட்டில் வரைந்து சந்தனம் புஷ்பங்கள் சாத்தி சோடச பூஜை செய்ய வேண்டும். பசு சாணம், சலம் இவைகளை வைத்து இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெங்கல பாத்திரமும் சதயத்திற்கு எள்ளும் பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை) உத்திரட்டாதிக்கு வெல்லமும் ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி ஒரு படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன்மேல் கும்பம்வைத்து அதில் லஷ்மியை பிரதிமையை வைத்துப் பூசித்து கிழக்கு முதல் ஈசானம் வரை திக்கு பாலகர்களை கலசங்களிற் பூசித்து நைவேத்திய தூபதீபம் கொடுத்து அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐநூறாவது செபித்து கும்பத்திற்கு மேற்கே அக்னி உண்டாக்கி அதில் லக்ஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்க. நவக்கிரக ஓமம் செய்து கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி கும்ப நீரால் அபிஷேகம் செய்து பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து ஆசாரியை பூஜை செய்யவும். இது அபரக் கிரியா விதிவியாக்கியானத்திற் கூறப்பட்டது.

### இக் காலத்தில் நடைமுறையிலுள்ள சாந்தி

அந்தியேட்டி அன்று இரவு வீட்டு முற்றத்தில் பந்தலிட்டு வெள்ளை கட்டி மாவிலை தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகி சாந்தியை ஆரம்பிப்பர். விக்னேஸ்வர பூஜை புண்ணியாகவாசனம் பஞ்சகௌவிய பூஜை முடித்து முற்றத்தில் (சுளகு) அரிசிமா மஞ்சள் மா கரிமா இலை (பச்சை) மா செங்கல் (சிவப்பு) தூள் இவற்றால் சிதாஜ்ஞாபனம் வரைந்து இதில் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினால் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து இறந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து அக்னி உண்டாக்கி ஆகுதி பலி பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து முறத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர் நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி அநுட்டானம் முடிந்த பின் சிவன் வர்த்தினி லக்ஷ்மி நவக்கிரக தேவர்களையும் பூசித்து கர்த்தாவிற்கு சிவன் வர்த்தினி கும்ப நீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின் ஐந்து பலமும் எள் எனின் இரண்டு படியும் வஸ்திரம் எனின் இரண்டும் வெல்லம் ஆயின் பத்து பலமும் வெள்ளி எனின் ஒரு பலமும் தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம் சதயத்திற்கு மூன்று மாதம் புரட்டாதிக்கு ஒன்றை மாதம் உத்திரட்டாதிக்கு ஒரு மாதமும் ரேவதிக்கு பதினைந்து நாட்களும் தோஷமாகும்.

### எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற விரியை பத்ததி ஆகமங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாளில் செய்வதும் உண்டு. இறந்தவரின் ஆத்மா சாந்தியடையச் செய்யப்படும் ஒரு விசேட தினம் இதுவாகும். இறந்தவர் விரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ட உணவு வகை யாவும் படைக்கும்பேருணவுப் படையல் படைத்து தீபம் காட்டி அவ்வளவு வகைகளில் சிறு பகுதியை எடுத்து தீப்பந்தம் இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளைகளில் நடத்துவர். இதில் மாமிச உணவு மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும் போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாளும் மாமிச உணவை தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகை தயாரிப்பதில்லை. கொள்ளிவைத்தவர் எட்டுச் செலவு முடிந்து அடுத்த நாளே வீட்டை விட்டு வெளியே செல்லலாம்.

எட்டுச் செலவன்று ஒரு கதிரையில் இறந்தவரின் படத்தை வைத்து (சில இடங்களில் உருவமாகச் செய்வர்) அதற்கு வேட்டி சால்வை (பெண் என்றால் சேலை உடுத்துவார்) அணிவித்து அவர் பாவித்த முக்கிய பொருட்கள் கண்ணாடி, குடை போன்றவற்றை வைப்பர். ஒரு விளக்கு எரிய விடவும் படம் வடக்கே அல்லது கிழக்கே பார்க்கலாம். கர்த்தா தெற்கே பார்த்து செய்ய வேண்டும். மூன்று தலை வாழை இலைகளை (நுனி தெற்கே பார்க்க வைக்க வேண்டும்) முன்னுக்கு வைத்து உணவு வகைகள் பானங்கள் பழங்கள் பலகாரங்கள் இளநீரும் படைக்கவும்.

பின் கர்த்தா தீபம் இடம் வலமாக காட்டி தேவாரம் பாடி உணவு வகைகளை மூடியிருக்கும் இலைகளை அகற்றி வலது கையில் சிறிது நீர் எடுத்து இடப்பக்கமாக உணவு வகைகளுக்கு மேல் திகத்து அர்ப்பணம் செய்ய வேண்டும் படைத்த பொருட்கள் எல்லாவற்றிலும் சிறுபகுதி எடுத்து ஒரு பெட்டிக்குள் வைத்து இளநீரும் தீவர்த்தியுடன் சென்று முச்சந்தியில் வைத்து விட்டு வருவார். அவர்கள் வெளியே செல்ல ஒருவர் பின்னால் மஞ்சள் நீர் தெளிப்பார். வீட்டுக்குள் வருமுன் கால் கழுவி வர வேண்டும். ஆசௌசம் உள்ளவர்கள் மட்டுமே உண்ணுவார்கள். வெளிநாடுகளில் இருப்பவர்கள் முச்சந்தியில் வைக்க முடியாது. ஆகவே ஆற்றிலோ கடலிலோ விடலாம்.

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச்செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம் அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேஷ்டி சமய அந்தியேஷ்டி விசேட அந்தியேஷ்டி நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய விசேட நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு அவர்கள் பெற்ற தீட்சை வகையில் செய்யப்படும். விசேட நிர்வாண அந்தியேஷ்டியும் சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யபடும் சமய அந்தியேஷ்டியும் பிரேதத்தில் சுடலையில் செய்யப்படும். ஏனையோர்க்கு செய்யப்படும் சமய அந்தியேஷ்டி ஆசௌச முடவில் 31 ஆம் நாளில் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால், அந்தியேஷ்டி (தர்ப்பை சுடுதல்) நாள் பார்த்துதான் செய்ய வேண்டும். நத்தை பத்ரை திரியோதசி தவிர்ந்த திதிகளும் செவ்வாய் வியாழன் வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும் திரிபாத நட்சத்திரமும் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம் (காலவிதானம்) நத்தை பிரதமை சஷ்டி ஏகாதசி பத்தரை - துதியை ஸப்தமி துவாதசி திரியோதசி நட்சத்திரம் கார்த்திகை உத்தரம் உத்தராடம் புனர்பூசம் விசாகம் பூரட்டாதி 31 ஆம் நாள வரையில் அந்தியேஷ்டி செய்யலாம் (30 இரவு நிறைவு பெற்றால்தான் ஆசௌசம் முடியும். அதற்குள் நிறைவு பெறாது).

சுடலை ஆற்றங்கரை குளக்கரை சமுத்திரக்கரை வீடு (கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேஷ்டி செய்ய உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்தபட்சம் ஐந்து முழு நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி விதானம் தோரணம் பூ மாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பகுதியில் ஓமகுண்டமும் வடமேற்கில் சிவகும்பமும் வடகிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும் தென்மேற்கில் பஞ்ச கௌவிய மேடையும் தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேதகன இடம்) ஆகியவற்றையும் சுற்றுவேதிவையில் (மண்டபத்தின் சுற்றுப் புறத்தில்) தசாயுத கும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளிகை (பிரேதம் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளால் முறுக்கி இடப்பக்கமாக முடிந்து ஐவைந்து தர்ப்பைகளால்கைகளும் பதின்மூன்று தர்ப்பைகளாக பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும். ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து தெற்கு வாயிலாக மண்டபத்திற்குள் புகுந்து சிவகும்வேதிகைக்கு தெற்கே வடக்குநோக்கி இருந்து கர்தாவிற்கு திருநீறு கொடுத்து சங்கற்பம் செய்து கொண்டு சளிகரணம் பூத சுத்தி மந்திர சுத்தி அந்தர் யாகம் சிவகஷதம்செய்து சிவோகம் பாவனை முடித்து ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகௌவிய பூஜை முடித்து யாக மண்டபத்தையும் கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்ச கௌவியத்தால் தெளித்தல் வேண்டும். சூர்ணோட்சவம் செய்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்த நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசா னத்தில் பாசுபதாஸ்திர ஈசனத்தில் இடவும்.

**நக்னதானம்**

இறந்தவருக்கு ஏற்படக் கூடிய பசி தாகம் குளிர் (ஆடை இல்லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டு செய்யப்படும் தானம் நக்னதானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியாருக்கு அரிசி வஸ்திரம் முதலியனவற்றை தானமாகக் கொடுக்க வேண்டும். உயர் தீட்சை உடையோருக்கு பிரேததானம் செய்த உடன் இத்தானம் கொடுக்கப்படும்.

**பாகஷாணத்தாபனம்**

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாணபூஜை எனப்படும். இதில் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி தாகம் நீங்கும்பொருட்டும் பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும். ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்யேட்டி செய்பவர்கள் வீட்டிலே பாஷாணத்தாபனம் செய்து விரிவாக பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறைவெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக்கிரியை நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடக்குக் கழிவு

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள். முப்பத்தோராம் நாட் காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும். சைவ போசனமுடையவர்கள் மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரும் நீராடி குருக்களைக் கொண்டு புண்ணியாகவாசன் செய்து ஆசௌசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடிப்) படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகள் செய்யலாம்.

## வீட்டுக் கிரியை

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் சாத்தி பிள்ளையார் பிடித்துவைத்து, வாயிலில் மாவிலை கட்டவும். வீட்டுக் கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து விக்னேஸ்வர பூஜை, தீபதேவு பூஜை, பஞ்சகௌவிய பூஜை, வருணகும்ப பூஜை என்பன் நிறைவேறிய பின் கர்த்தவாவிற்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கப்படும்.

## அனுஞ்ஞை

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பனவற்றை கர்த்தா தலையில் வைத்து இடப் பக்கமாக மூன்று முறை சுற்றி இன்னவருடம், அயனம், ருது, மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுபதினத்திலே இன்னாருக்கு சிரார்த்தம் செய்கிறேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று குருவினிடம் வேண்ட அவர் அதிகாரம் தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையைக் கர்த்தாவிடம் கொடுக்க அதைக் கர்த்தா இடுப்பில் செருகிக் கொள்வார். பின்னர் வலதுகை மோதிர விரலில் பவித்திரத்தையும் வலத் தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்.

## சூரிய பூசை

சிவப்பு நிறப்பூவும் நீரும் கொண்டு மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து சூரியமூர்த்தியை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்தில் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதனம், ஏகோதிஷ்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகிறேன் என்ற சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

## இடபதானம்

இறந்தவருடைய தான தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாக சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம் (ஆண் மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் வடிவை எழுதி அதன்மேல் தேங்காய் வைத்து கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இடுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் குருவானவருக்கு தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோதிஷ்டம்

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடிதாகப் பாவனை செய்து வேண்டி, சால்வை சந்தனம், பூ என்பவற்றைச் சாத்தி அரிசி, மரக்கறி என்பனவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்து வாழையிலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய எட்டு பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடதுகையையும் ஊன்றியிருந்து கை மாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு பழம், இளநீர், நைவேத்தியம் தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன - பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராகமகம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள் சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம்.

**மாசியம்**

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசியமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும் முதல் மாதத்திற்குரிய மாசியம் ஏகேதாதிஷ்டம் என்ற பெயரில் முதலில் செய்யப்பட்டது இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும் ஊனமாசிகம், ஊனதிரிபட்ச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்துமாசிகம் செய்தல் வேண்டும்.

1. ஊனமாசிகம் - இறந்தநாள் முதல் இருபத்தேழு நாளின் மேல் மூன்று நாட்களுட் செய்யப்டுவது
2. ஊனதிரிபட்ச மாசிகம் - அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் 45 ஆம் நாளுக்கிடையில் செய்யப்படுவது
3. ஊனாசாண் மாசிகம் - மேற்கூறப்பட்டபடி 170 ஆம் நாள் முதல் 180 நாட்களுக்கிடையில் செய்யப்படுவது
4. ஊனஆப்திக மாசிகம் - அவ்வாறே 350 நாள் முதல் 365 ஆம் நாட்களுக்கிடையில செய்யப்படுவது.

மாதந்தோறும் செய்யும் பதினொரு மாசிகங்களும் இந்த திதியில் செய்யப்படும் ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளில் செய்ய வேண்டும்.வெள்ளிக்கிழமையிலும் நத்தை, சதுத்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும் கார்த்திகை, ஆயிலியம, பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்கரயோகம் என்பவற்றிலும் ஊன மாசிகம் செய்தல் ஆகாது.

பதினைந்து மாசிகங்களும் செய்ததன் மேல் வருட முடிவில் தான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயுனும் கர்த்தாவின் அசௌ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவில் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும் பின்னரும் உரிய காலத்தில் மாசிகங்களைச் செய்வது சிறந்ததாகும்.

### சோதகும்ப சிரார்த்தம்

இது நீரால் நிரம்பிய பாத்திர (உதகம் - நீர்) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு இறந்தநாள் முதல் வருடம் முன்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்படாததால் இப்போது வபீண்டீகரணத்தின் முன் சோதகும்பதானம் நடை பெறும்.

### சபிண்டீகரணம்

பண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த இறந்தவருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத் தன்மை நீங்கிப் பிதிர்தன்மையும் சிவலோகப் பேறும் அடையும், சபிண்டீகரணத்தின் மேற் செய்யும் சிரார்த்தங்களில் நித்த பிண்டம் இன்றி பிரித்ப்பிண்டம் மூன்று இட்டுச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதய தெய்வம் அமரர் திரு செல்லையா செல்லகாந்தன் அவர்கள் 13.08.2022 அன்று இறைவனடி எய்திய செய்தி கேட்டு, உடன் வந்து உதவிய உற்றார் உறவினர்களுக்கும், அயலவர், நண்பர்களுக்கும், மரணச் சடங்கு ஒழுங்குகளில் முன்நின்று உதவியவர்களுக்கும், வீட்டுக்கு வந்து துயரைப் பகிர்ந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம் அனுப்பியவர்களுக்கும், மலர் மாலை அணிவித்தவர்களுக்கும், மலர் அஞ்சலி செய்தவர்களுக்கும், எங்களை சோரவிடாது தோளோடு தோள்கொடுத்தவர்களுக்கும், அன்னாரது ஈமக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், தாகசாந்தி உணவு வகைகளை வழங்கி உதவியவர்களுக்கும், அந்தியேட்டி, ஆத்மசாந்தி பிரார்த்தனை, மதிய போசனம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இங்ஙனம்
மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு.

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.


எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



## Geethasaram

Whatever happened, it happened well.

Whatever is happening, it is happening well.

Whatever will happen, it will also happen well.

What of yours did you lose?

Why or for what are you crying?

What did you bring with you, for you to lose it?

What did you create, for it to be wasted or destroyed?

Whatever you took, it was taken from here.

Whatever you gave, it was given from here.

Whatever is yours today, will belong to someone else tomorrov

On another day, it will belong to yet another.

This change is the law of the universe.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org